

# லேனாவின் பார்வையில் சமூக அலசல்கள்

முனைவர் லேனா தமிழ்வாணன்

# 1

## ஏன் இந்தப் பொறுப்பற்ற போக்கு?

பாராளுமன்றத்தை இயங்கவிடாமல் செய்வதில் எதிர்க்கட்சிக்காரர்களுக்குத்தான் எத்துணை ஆர்வம்!

பாராளுமன்றம் என்பது ஒரு ஜனநாயக அமைப்பின் முதுகெலும்பு. இதனைச் சேதப்படுத்துவதில் எதிர்க்கட்சிகள் முனைப்பாக இருப்பது கவலை தரும் விஷயம்.

அண்மையில் பாராளுமன்றம் இயக்கமற்றுப் போகக் காரணம் ஒரு பெயர் நீக்கப் பிரச்சினைதான். இதற்கான பிரச்சினை முடிச்சு என்ன என்பதைத் தெரிந்துகொள்வோம். அந்தமான் சிறையில் விடுதலைப் போராட்ட வீரர்கள் நினைவாக நினைவுத் தூண் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதில் சுதந்திரப் போராட்ட வீரர்களான சுபாஷ் சந்திரபோஸ், வீர சாவர்க்கர், மதன்லால் திங்ரா, பகத்சிங் போன்றவர்களின் பெயர்களும் அவர்களது பொன்மொழிகளும் பொறிக்கப்பட்டிருந்தன.

அண்மையில் நிகழ்ந்த ‘வெள்ளையனே வெளியேறு’ நினைவு நாளை முன்னிட்டு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சார்பில் அந்தமானில் ஒரு விழா நடந்தது. இந்த விழாவில் மத்திய பெட்ரோலிய அமைச்சர் கலந்துகொண்டார். அப்போது அமைச்சர் வீர சாவர்க்கரின் பெயரையும், அவரது பொன்மொழிகளையும் நீக்கிட உத்தரவிட்டதாக ஒரு புகார். இந்தப் புகார் உறுதிப்படுத்தப்படாத நிலையில்தான் பாராளுமன்றம் டெல்லியில் கூடியிருக்கிறது.

பாரதிய ஜனதாக் கட்சி உறுப்பினர்களும், சிவசேனைத் தொண்டர்களும் அமைச்சர் இதற்கு மன்னிப்புக் கேட்க

பேசியதாகவும், அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க சபாநாயகர் உத்தரவிட்டதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அவ்வளவுதான்! விவகாரம் மேலும் பெரிதாகி விட்டது.


சுதந்தரப் போராட்ட வீரர்களுக்கு அவமரியாதை நடந்துவிடக் கூடாது என்பதில் எவருக்குமே இரண்டாவது கருத்து இருக்க முடியாது. வீர சாவர்க்கர் பெயரும் பொன்மொழிகளும் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையில் தவறு இருக்க முடியாது. ஆனால் இவற்றைச் சாதிக்க இதுவா வழி? நாட்டில் தலைவிரித்தாடும் விவகாரங்கள் எவ்வளவோ இருக்க, இதுதானா தலைபோகும் பிரச்சினை?

எதிர்க் கட்சிகள் ஆறுதல் அடையும்படியான, ஏற்கும்படியான பதிலை ஆளும் அரசு ஏன் தரவில்லை? ஏன் இந்த நழுவல் பதில்?

பாராளுமன்றத்தை இயங்க அனுமதித்துவிட்டு கடைசி விவகாரமாக இதை எழுப்பித் தங்கள் ஆட்சேபக் குரலை எதிர்க்கட்சிகள் எழுப்பியிருக்கக் கூடாதா?

இப்படியே போனால் வரவர உப்புச் சப்பு இல்லாத காரணங்களுக்கெல்லாம் பாராளுமன்றத்தை உறைய வைப்பார்கள் போலிருக்கிறது.

நாட்டிற்கு நன்மை செய்வீர்கள் என்று உங்களை நம்பி ஓட்டுப்போட்ட மக்களுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு இதுதானா? வெட்கம்! வெட்கம்!



வேண்டும் என்றும், அரசு இச்சம்பவத்திற்கு விளக்கம் தரவேண்டும் என்றும், சுதந்திரப் போராட்ட வீரர்களை இந்த அரசு அவமரியாதை செய்யக்கூடாது என்றும் கோரி ஆர்ப்பாட்டம் நடத்திப் பாராளுமன்றம் செயல்படாதபடி செய்திருந்தார்கள்.

பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் அரசு சார்பாக விளக்கமளிக்க எதிர்க் கட்சிகளிடம் அவகாசம் கேட்டும் இச் சம்பவம் நடந்திருப்பது வேதனைக்குரியது.

உரியவர்கள் அவையில் இல்லாத சூழலில், ஆதாரபூர்வமான உண்மைகளை முன்வைக்க ஆளும்கட்சிக்கு நிச்சயம் கால இடைவெளி தேவை.

அமளிகள் தொடரவே அவசர அவசரமாக அமைச்சரிடம் விளக்கம் கேட்க, தான் எந்த உத்தரவும் இடவில்லை என்றும், இந்தியன் ஆயில் அதிகாரிகள் அளவில் உத்தரவு இடப்பட்டுள்ளது என்றும் விளக்கமளித்திருந்தார்.

சிவசேனைக்கு இந்தப் பதிலில் உடன்பாடு இல்லை. சபாநாயகரின் மேடையருகே வந்து கூச்சலிட்டிருக்கின்றனர். எதிர்க் கட்சியினர் சிலர் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்திப்

2

# அரிசி ஆலை ஊழியர்களின் அவல நிலை மாறுமா?

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தை நவீனமயமான காலம் என்று வருணிக்கலாம் என்றால் சற்று யோசனையாகத் தான் உள்ளது.

கற்காலம், இரும்புக்காலம், செம்புக்காலம், பொற்காலம் என்கிற அளவீடுகளை மனத்தில் கொண்டுதான் இதனைக் குறிப்பிடுகிறேன்.

திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 12,000 கொத்தடிமை கள் இருக்கிறார்கள் என்று தேசியப் பெண்கள் ஆணையத்தின் தலைவி பூர்ணிமா சொல்லியிருக்கிறார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் அரிசி ஆலைகள் அதிகம். இங்கே இந்த ஆலைகளை ஒட்டியும், ஆலைகளுக்குள்ளும் ஜோடியாகவும், குடும்பமாகவும் அரிசி ஆலை ஊழியர்கள் வசிக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் இருளர் சமூகத்தையும், பழங்குடி இனத்தையும் சேர்ந்தவர்கள். வருமானத்திற்காகச் செய்துவந்த குலத் தொழில்கள் மெல்ல மெல்லக் குறைந்துவிட்டன. உதாரணமாகப் பாம்பு பிடிப்பது.

வனத்துறையின் பாம்புகளைப் பாதுகாக்கும் கோணத்தில் கடுமையான நடவடிக்கை எடுப்பதால் இத்தொழில் வெகுவாகச் சுருங்கிவிட்டது.

வயிற்றுப்பாட்டிற்காக இவர்களுள் பலர் அரிசி ஆலைகளில் தஞ்சமடைய, சில அரிசி ஆலை அதிபர்களுக்குக் கொண்டாட்ட மாகிவிட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 83 அரிசி ஆலைகள் உள்ளன. இவற்றுள் ஒரு சில ஆலைகளுக்கு நான் நேரில் சென்றிருக்கிறேன். இவர்களது பணி நேரம் இன்னதுதான் என்றில்லை. சமயங்களில் தொடர்ந்து 19 மணி நேரம் வேலை செய்ய வேண்டும்.

எப்போதோ வாங்கிய பணத்திற்குக் கடுமையாக வட்டி போட்டு அது குட்டியும் போட்டு மீள முடியாத மலைப்புத் தொகையைச் சொல்லி, இவர்களைக் காலம் காலமாக அடிமைகள் போல் நடத்துகிறவர்கள் உண்டு. பரிந்துரைக்கப் பட்ட கூலியைக் கொடுத்தாலாவது கடன்தொகை விரைவில் அடையும். அதுவும் இல்லை. சிலரின் தினக்கூலி மிகமிக மோசம் என்று பெண்கள் ஆணையம் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறது.

இந்தக் கடனிலிருந்து என்று மீள்வது?


பெண்கள் ஆணையம் வேறு சில பரிந்துரைகளையும் தமிழக அரசிற்குத் தந்துள்ளது.

தொழிலாளர் சட்டம், ஆலைச் சட்டம், குறைந்தபட்சக் கல்விச் சட்டம் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

பெண் ஊழியர்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகளைச் செய்யும் ஆலை அதிபர்கள் மீது நடவடிக்கை தேவை. அரசு அதிகாரிகள், இருளர் நலச் சங்க உறுப்பினர்கள் கொண்ட குழு உருவாக்கப்பட்டு, நிலைமைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.

இதே நேரத்தில் ஆலை அதிபர்களின் மனக்குறைகளும் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன.

முன்பணமாகப் பெரிய தொகைகளை வாங்கிக்கொண்டு சரிவர வேலை செய்வதில்லை. தவறான பழக்கங்களுக்கு அடிமையாகி, பணிபுரியாமல் கடன் சுமையை அதிகமாக்கிக் கொள்கின்றனர்; கூலிக்குப் பதிலாக அரிசியை வாங்கிக் கொள்கிறவர்கள் உண்டு. இவர்கள் இந்த உண்மையை ஒப்புக் கொள்ள முன்வர வேண்டும். ஆலைகளில் வரவர இலாபம் காண்பதே கடினமாக உள்ளது. செலவினங்கள் பெருத்துவிட்ட அளவிற்கு வருமானங்கள் உயரவில்லை. நாங்கள் இனி



ஊழியர்களை அதிகம் நம்புவதாக இல்லை. நவீனமயமாக்கி ஆலை ஊழியர்களைக் குறைக்கப் போகிறோம் என்கிறது இந்தத் தரப்பு.

கூட்டிக் கழித்துப் பார்த்தால்கூட அரிசி ஆலை ஊழியர்கள் நிலைமையும் வாழ்க்கைத் தரமும் படுமோசம் என்பது மறுக்க முடியாத உண்மை.

நல்ல நேரத்தில் விழிப்புணர்ச்சி தந்திருக்கிறது தேசியப் பெண்கள் ஆணையம்.

அரசுத் தகவலின்படி 53 பேர்தான் கொத்தடிமைகள் என்கிற தவறான பதிவும் இவ்விஷயத்தில் அரசு காட்டும் வேகமும் போதாது என்பது மட்டும் உறுதி.

## 3

# ஓட்டுப் போட்டவர்களின் அடுத்த கடமை

சட்டமன்றத் தேர்தலில் ஜனநாயகக் கடமையைச் சரிவர ஆற்றும் வண்ணம் ஓட்டுப்போட்டவர்கள் பாராட்டுக் குரியவர்கள்.


இந்தத் தேர்தலைப் புறக்கணிக்கிறோம்; அரசியல்வாதிகளே எங்கள் பகுதிக்குள் ஓட்டுக் கேட்க வராதீர்கள்! என்றெல்லாம் எதிர்ப்புக் குரல் கொடுத்தவர்கள், ஜனநாயக நீரோட்டத்தைக் குறைத்து மதிப்பிட்டவர்கள் ஆவார்கள்.

எவருக்கும் என் ஓட்டு இல்லை என்று எதிர்ப்புத் தெரிவித்து ஓட்டுப் போட்டவர்களைக்கூட ஓரளவு சேர்த்துக்கொள்ளலாம்.

ஓட்டளித்தவர்கள் பல இரகத்தினர். இது என் பிறப்புரிமை என்பவர்கள் உண்டு. இந்த மண்ணின் தலைவிதியை நிர்ணயிப்பது என் வாக்கு என்று நம்பி ஓட்டுப் போட்டவர்கள் உண்டு. என் கட்சி எப்படியும் வெற்றிபெற வேண்டும் என்கிற தீவிர உணர்வோடு வாக்குத் தந்தவர்கள் உண்டு. இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன என்கிற சிந்தனையில் கடனே என்று ஓட்டுப் போட்டவர்களும் உண்டு.

எப்படி ஓட்டுப் போட்டிருந்தாலும் சரி, இதோடு முடிந்துவிட்டது நம் ஜனநாயகக் கடமை; இனி அடுத்த தேர்தல்தான் என்று இருந்துவிடக் கூடாது.

இன்னுமொரு முக்கியக் கடமையும் பாக்கி இருக்கிறது.



தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் எளிதில் வென்று விடவில்லை. பல வாக்குறுதிகளைப் போட்டி போட்டுக் கொண்டு அள்ளித் தந்திருக்கிறார்கள்.

இது சாத்தியந்தானா? என்கிற ஆராய்ச்சியிலெல்லாம் முதலில் இறங்கவில்லை. எதிர்க்கட்சியினரும் கூட்டணிக் கட்சியினரும் அறிவித்த அறிக்கைகளையும், ஊட்டிய நம்பிக்கைகளையும் பார்த்துத்தான், ஓகோ! சாத்தியமானவற்றைத்தான் அறிவித்திருக்கிறோம் என்று தெளிந்திருப்பார்கள்.

இவர்கள் தந்த வாக்குறுதிகளின் அனைத்து வடிவங்களையும் (ஒலி, ஒளி, அச்சு) திரட்டி ஒன்றாக்கி இவற்றைச் சிறு மாற்றங்கூட இல்லாமல் நீங்கள் எங்களுக்கு நடைமுறைப் படுத்திக் காட்ட வேண்டும் என வற்புறுத்த வேண்டும்.

பொதுமக்களின் விழிப்புணர்வு முன்புபோல் இல்லை. பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. இதன் பரிமாணம் சற்றேனும் ஆளுங்கட்சியினருக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

இதில் சில நிபந்தனைகள் விதித்து, தவிர்ப்பதற்குச் சற்றே வழி தேடலாம். அதில் சலுகை காட்டிவிட முடியாது.

அவகாசம் வேண்டுமானால் தவிர்க்கப்படலாம்.

நாட்டின் நலவிரும்பிகள் இருந்தால் ஓர் இயக்கமாகவே இது ஆரம்பிக்கப்படலாம். இவ்வியக்கத்தில் அனைத்துத் தரப்பினரின் பிரதிநிதித்துவமும் தவறாமல் இருக்க வேண்டும். தேர்தலைச் சரிவர நடத்துவதோடு தேர்தல் ஆணையகத்தின் கடமை முடிந்துவிடுகிறது.

எதிர்க்கட்சிகள் தட்டிக் கேட்கலாம்; காலப்போக்கில் விட்டுவிடவும் செய்யலாம். ஆனால், ஆட்சியில் அமர்ந்திருப் பவர்களிடம், வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்வரை தட்டிக் கேட்கும் உரிமை ஓட்டுப் போட்டவர்களுக்கு இருக்கிறது.

இனி வாக்குறுதி கொடுத்தால் மக்கள் பிடியிலிருந்து தப்ப முடியாது என்கிற உணர்வை அரசியல் கட்சிகள் மத்தியில் ஏற்படுத்தாதவரை, தேர்தல் வாக்குறுதிகளுக்கு ஒரு வரையறையே இல்லாமல் போய்விடும்.

என்னதான் அதிகாரிகளைக் கலந்து நிபுணர்களுடன் ஆலோசித்து கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது சாத்தியம்தான் என்று பதவியில் இருப்பவர்கள் நம்பிக் கொண்டிருந்தாலும் ஏனோ தேர்தலுக்காக அறிவித்தவை யெல்லாம் சாத்தியமில்லை என்றே எனக்குப் படுகிறது.



ஆபத்தான நோயல்லவே தவிர, கடுமையான பாதிப்பிற்கு உள்ளாக்குகிற நோய் என்பதைப் பாதிக்கப்பட்டவர்கள் - மிரட்சியான பார்வையுடன் சொல்லும்போது, மிகப் பரிதாபமாக இருக்கிறது. காய்ச்சல் குறைந்த பிறகும் நோயின் தீவிரம் அடங்குவதில்லை. மூட்டுப் பகுதிகளை முடக்கிப் போடுகிற மோசமான நோய் இது. மருந்தும் இல்லை; தீவிரத்தைக் கட்டுப்படுத்தவும் வழியில்லை என்கிறபோது மக்கள் அரசின் நடவடிக்கையைத் தீவிரமாக எதிர்ப்பார்ப்பது இயற்கையே.

சென்னையைப் பொறுத்தவரை வரலாறு காணாத கொசுப் படையெடுப்பு நிகழ்வதாக, சென்னை நகர மக்கள் மனக்குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

இப்போது அடிக்கப்படும் கொசு மருந்துக்குப் பலன் ஏதும் இல்லை என்பது தெளிவாகிறது. உயிரினங்கள் தங்களைத் தொலைக்கும் மருந்துகளுக்குக் காலப்போக்கில் டாட்டா காட்டும் அளவிற்கு எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொண்டுவிட்டன என்பது உயிரின வல்லுநர்களின் புதுக் கண்டுபிடிப்பு.

4

## நாடி பிடித்துப் பார்க்கிறபோது...

தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சரின் அறிக்கைகளுக்கும், சிக்குன் குனியா நோயின் தன்மைக்கும், இதன் வீரியப் பரவலுக்கும் இடையே பெருத்த இடைவெளியைப் பார்க்கிறேன்.

சிக்குன் குனியா தமிழக நல்வாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டை மீறிக் கடிவாளங்களை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டதாகவே பத்திரிகைச் செய்திகள் புலப்படுத்துகின்றன.

கொசுவால் பரவும் இந்நோயைக் கட்டுப்படுத்துவது ஒருபுறம் இருக்கட்டும். கொசுவைத் தடுக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதே பலரது கேள்வி.

சிக்குன் குனியா நோயைக் கட்டுப்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்கிற எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டும் மேலோட்டமான ஒன்றல்ல.

இந்நோயால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்கிற எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டைத்தான் மிகைப்படுத்தலான ஒன்றாகக் கருதத் தோன்றுகிறது. காரணம், மருத்துவர்கள் இதை ஆபத்தற்ற நோய் என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்துச் சொல்லிவிட்டார்கள். உயிரிழப்புகள் சில நிகழ்ந்திருப்பின், அதற்கு வேறு சில காரணங்களும் சேர்ந்து கொண்டிருக்கலாம்.

கொசுவின் உற்பத்திக் களங்களை அடையாளம் கண்டு மருந்து தெளிப்பது; பாதிப்பு அதிகம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் தடுப்புப் புகை மூலம் கட்டுப்படுத்துவது ஆகிய நடவடிக்கைகள் போர்க்கால நடவடிக்கைகளைப் போல மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 5

## ஆசிரியர்களின் புதிய ஆயுதம்

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. என் பெரியம்மாவிடம் நான் வளர்ந்த நாட்களில் நான் பள்ளியில் அடம் செய்தாலோ, சரியாகப் படிக்காவிட்டாலோ, “இவன் தோலை உரிச்சு உப்புக்கண்டம் போடுங்க” என்று ஆசிரியரிடம் சொல்லியிருக் கிறார்கள்.

ஆசிரியர்கள் என்ன கண்டித்தாலும், எவ்வளவு அடித்தாலும் அதை ஆதரித்த பெற்றோர் உண்டு.

மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் வளரவேண்டும் என்று தான் இந்தச் சமூகம் எதிர்பார்த்தது. ஆசிரியர்களுக்கும் மாணவர் உலகம் தவிர வேறு சிந்தனை இல்லாதவர்களாக இருந்தார்கள்.

இன்றோ ஆசிரியர்கள் சிலர் கல்வி வியாபாரிபோல் ஆகிவிட்டார்கள். டியூஷனுக்கு ஆள் பிடிக்கும் வேலையில் இறங்கிவிட்டார்கள். பிற தொழில்கள் பலவற்றைப் பக்க வருமானத்திற்காகச் செய்கிறார்கள். சிலர் மாணவ / மாணவி களிடம் அநாகரிகமாக நடந்துகொள்கிறார்கள்.


மாணவ மாணவிகளோ நன்மைக்குக் கண்டிக்கும், தண்டிக்கும் ஆசிரியர்களைக்கூட ஜென்ம விரோதிபோல் பார்க்கிறார்கள்.

பெற்றோரும் கேட்கவேண்டாம். என் பிள்ளையை எப்படி நீங்கள் அடிக்கப் போயிற்று? என்று சண்டைக்கு வருகிறார்கள். கல்வித்துறையின் உயர் அதிகாரிகள் அளவிற்குப் புகார் செய்ய முன்வருகிறார்கள். விட்டால் மனித உரிமை ஆணையம்வரை கூடப் போவார்கள் போலிருக்கிறது.

இப்படி இருக்கையில், ஹைதர் அலி காலத்து மருந்துகளை அடித்துக்கொண்டிருப்பது காலத்தையும், காசையும் வீணடிக்கும் செயலே தவிர வேறு அல்ல.

வசதி படைத்தவர்களுக்கு இந்நோய் வந்தால் உடல் பாதிப்போடு சரி. ஆனால் எளியவர்களுக்கோ பொருளாதார பாதிப்பு வேறு. வேலைக்குச் செல்லவோ, வருமானத்திற்கு வழிவகை செய்யவோ இயலாமல் முடங்கிப் போகிறார்கள். முடங்கி. இவர்களுக்குப் பொருளாதார உதவியோ, உணவு வடிவிலோ ஏதேனும் செய்தாக வேண்டிய கடமையும் இருக்கிறது.

ஏற்பட்டிருப்பதோ ராஜ பிளவை நோய். அதன் மீது தடவப் படுவதோ தேமல் மருந்து.




திட்டியதற்கும், சிறு தண்டனைகளைக் கொடுத்ததற்கும் கூடத் தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்குப் போய் விட்டார்கள்.

இவர்களைப் பாதுகாக்கும் விதமாக தமிழ்நாடு கல்வி விதிகளிலிருந்து விதி 51 என்பது ஏனோ அறவே நீக்கப்பட்டு விட்டது. இதன்படி இனி மாணவ - மாணவிகள் எவரையும் உடல்ரீதியாகத் தண்டிக்க முடியாது. தண்டித்தால் வேலையேகூடப் போய்விடலாம். குறைந்தபட்சம் தற்காலிகப் பணி நீக்கமோ, விசாரணைகளோ உண்டு.

எங்கள் காலத்தில் நாங்கள் வாங்கிய தொடைக் கிள்ளல்களும், முட்டிகளில் வாங்கிய பிரம்படிகளும், மேசை மேல் மணிக்கணக்கில் நின்ற செயல்களும்தாம் இன்றையச் சமூகத்தில் எங்களுள் பலருக்கு நல்ல நிலைகளைத் தந்திருக்கின்றன.

புதிய விதிப்படி மாணவர்களைத் திருத்த வேண்டிய கட்டாயம் ஆசிரியர்களுக்கு இல்லை. விட்டது பொறுப்பு. இனி



புயல் நிவாரணத் தொகை விஷயத்தில் அ.தி.மு.க. அள்ளிவிட்டதை அப்படியே பின்பற்ற வேண்டிய நிர்ப்பந்தம் தி.மு.க.விற்கு. பாவம்!

இதுவும் போதாது என்று அரசு இயந்திரத்திற்குக் கடுமையான வேலை வைக்கும் இந்தப் பொங்கல் இனாம் வேறு! ஏற்கெனவே அளிக்கப்பட்ட மளிகைச் சலுகைகள் எடுபடாத நிலையில் இந்தப் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பொதுமக்களின் அல்லது ஏழை எளிய மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைய.

ஒரு பாழும் கிணறாம். அதில் ஒரு முதலையாம். மேலே ஒரு புலியாம். நடுவில் ஒரு மரக்கிளையாம். அதில் ஒரு மனிதனாம். உயிர்ப் போராட்டமாம். அப்போது அந்த மரக் கிளையின் தேன் கூட்டிலிருந்து ஒரு சொட்டுத் தேன் அவன் வாயில் விழுந்ததாம். 'ஆகா! எவ்வளவு இனியது இந்த இனிப்பு!' என மகிழ்ந்தானாம் உயிர்ப் போராட்டத்தையும் மறந்து.

அந்தக் கதைதான் இந்தப் பொங்கல் இனாம் கதையும்.

தி.மு.க.வின் இந்தப் பொங்கல் இனாம்கள், மக்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டிய மிகப் பெரிய நிர்ப்பந்தத்தில் அரசு இருப்பதையே வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறது.

6

## போதுமா இந்தப் பொங்கல் இனாம்?

நம் பண்பாட்டில் இலவசங்களை விமரிசிப்பதை எவரும் விரும்புவதில்லை. தானம் கொடுக்கிற மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்ப்பதாவது? என்பார்கள்.

கொடுக்குறவனுக்குக் குறுக்கே நிற்பது மகாப் பாவம் என்பார்கள்.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டே இதை எழுத முன்வருகிறேன்.

தி.மு.க. கூட்டத்தில் தமிழக மக்கள் தமிழ்ப்புத்தாண்டு மற்றும் பொங்கல் நாளைச் சிறப்பாக கொண்டாட ரேஷன் பெறுவோருக்கு சர்க்கரைப் பொங்கல் தயாரிக்கத் தேவையான அனைத்துப் பொருள்களையும் இலவசமாக வழங்குவதென முடிவாகியுள்ளது. ஏழை எளிய மக்களைக் கருத்தில் கொண்டு பார்த்தால் இது ஒரு வரவேற்கத்தக்க முடிவாகவே தெரியும்.

இந்த இலவசத்தினை சற்று ‘ஸ்கேன்’ செய்து பார்த்தால் வேறு சில விஷயங்கள் புலப்படுவதைப் போல் தோன்றுகின்றன.

ஓட்டு வங்கியைக் கருத்தில் கொண்டே அரசுகள் ஒவ்வோர் அசைவையும் மேற்கொள்கின்றன. நடுத்தர, ஏழை, எளிய மக்களை எப்படியெல்லாம் கவரலாம் என்கிற அளவுக்கதிகமான சிந்தனையிலேயே ஆளும் அரசு நாளும் பொழுதையும் நகர்த்துகிறது.

ஓர் ஆட்சியில் மக்களைக் கூடுதல் இலவசங்களினால் எப்போதும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றால், தம் பக்கத்துக் குறைகளால் ஏற்பட்ட இரணங்களை ஒத்தடம் கொடுக்க முனையும்போதுதான்.

ஹாயாக இருக்கலாம். படிச்சாப் படி; படிக்காட்டிப் போ! எனக்கென்ன வந்தது என்கிற மனநிலையோடுதான் மாணவ மாணவிகளைப் பார்ப்பார்கள்.

மாணவர்களிடம் ஆசிரியர்கள் மீது பயம் கலந்த மரியாதையும், மாணவர்கள் மீது ஆசிரியர்களுக்கு கண்டிப்புக் கலந்த பிரியமும் அவசியம். புதிய விதித் தளர்வுகள் இதைப் பற்றியெல்லாம் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குப் பெற்றோரிடம் பயம் கிடையாது. பள்ளி ஆசிரியர் என்றால் சற்றேனும் உண்டு. இனி அதுவும் போய்விடும்.

புதிய சட்டத்தின்படி ஆசிரியர்களிடம் தரப்பட்டிருக்கும் ஒரே ஆயுதம் அன்புதான். இதை எத்தனை ஆசிரியர்கள் கையில் எடுத்துக்கொள்ளப் போகிறார்கள் என்பது மில்லியன் டாலர் கேள்வி.



மிக நெருக்கமான காலகட்டத்தில் படபடவென்று இந்த மூன்று சம்பவங்களும் தொடர்ச்சியாக நடந்துள்ளன. மூன்றின் பின்னணியிலும் பெண்கள். அதிர்ச்சியாக இல்லை!

பெண் இனத்தின் பிரதிநிதிகள் சிலர் சமீபகாலமாக இவ்வளவு முரட்டுத்தனமாக விஸ்வரூபம் எடுத்துள்ளதன் பின்னணி ஆராயப்பட வேண்டும்.

ஊடகங்களின் தாக்கம் இதில் அதிகம் என நான் ஊகிக்கிறேன். குறிப்பாக, திரைப்படத்தைவிடத் தொலைக் காட்சித் தொடர்கள் பெண்களைக் கவரும் நோக்கத்தில் பெண்களையே கதாபாத்திரங்களாக்கி அவர்களையே மாபாதகங்களில் ஈடுபடுத்திக்காட்டி, கொலை செய்யுமளவும், கூலிப்படையை அமர்த்துமளவும் போவார்கள் என்று கற்பனை செய்து உரிமம் வழங்கியுள்ளனர்.

ஊடகங்களின் சக்தி பலரும் அறியாத ஒன்று. இது உள்ளுக்குள் புகுந்து பல மனத் தயாரிப்புகளை மறைமுகமாக வழங்கிவிடக் கூடியவை.

## 7

## பெண் குற்றவாளிகள் பெருகி வருவதன் பின்னணி என்ன?

அம்பத்தூர் நிர்மலா, சோளிங்கர் சங்கீதா, பெங்களூர் செலின் ஆகியோர் பெண் இனத்திற்கே இழிவு சேர்க்கும் செயல்களைச் செய்துள்ளனர்.

ஒரு கள்ளத் துப்பாக்கியின் விலை தெரியுமா உங்களுக்கு? சுமார் இலட்ச ரூபாயாம். உங்களுக்கும் எனக்கும் இது புதுச் செய்தி. ஆனால், இதையே தொழிலாகச் செய்து பிழைத்து வந்தவர் இந்த அம்பத்தூர் நிர்மலா. கள்ளத் துப்பாக்கிகளை விற்பதன் மூலம் சமூகக் குற்றங்கள் பெருகாதா? அதைப் பற்றியெல்லாம் எனக்கென்ன கவலை? எனக்குக் காசு வந்தால் போதும் என்று செயல்பட்டிருக்கிறார் இந்த நிர்மலா. இத்தனைக்கும் ஒரு நிறுவனத்தின் அதிபர் இவர். பஞ்சத்தில் அடிபட்டவர் அல்லர்.

சோளிங்கர் சங்கீதா சமுதாயத்தின் மேல்மட்டத்தைச் சேர்ந்தவர். தந்தை ஒரு புரோகிதர். நான்கு திருமணங்களைச் செய்து மூன்று கணவர்களை சர்வசாதாரணமாகக் கைகழுவியவர். காமமும் காசுமே இவரது குறிக்கோள். இவையெல்லாம் போதாது என்று நான்காவது கணவரையே தூண்டி, இரட்டைக் கொலைகளைச் செய்யவும் தூண்டுதலாக இருந்தவர்.

பெங்களூர் செலின் இன்னும் பயங்கரம்! தன் கள்ளக் கணவனின் மனைவி லட்சுமியை ஒரு பெண் என்றும் பாராமல் துண்டு துண்டாக வெட்டி வழியெல்லாம் இத்துண்டுகளை வீசச் செய்யுமளவு கொடூர மனம் படைத்தவர். கூலிப் படையை அமர்த்தி, அந்த ஈவு இரக்கமற்ற கொலைக்குக் காரணமாக இருந்திருக்கிறார்.